# தமிழ் எழுத்தணி வைப்பு முறை

ஆறகழூர் மு. கண்ணன், எம்.ஏ.
தொகுப்பாசிரியர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்கம்
அருங்காட்சியக வளாகம்
எழும்பூர, சென்னை, இந்தியா

---

1. முன்னுரை

முதல்வகுப்புப்பாடநூலில் மட்டுமே தமிழ் எழுத்துக்கள் அனைத்தும் பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றன. அந்த எழுத்துக்களின் அணிவகுப்பை "எழுத்தணி" எனக் கொள்வோம். அதில் தமிழ் இலக்கணத்திற்குப் பொருந்தாத சில கூறுகள் தென்படுகின்றன. அவற்றைச் சுட்டிக் காட்டிச் செப்பம் செய்யும் முறை பற்றிக் கூறுவதே இவ்வெழுத்துரையின் நோக்கம்.

2. எழுத்தணி அமைப்பு

ஆய்தம், உயிர் 12ஆக 13 எழுத்துகளும் முதல் வரிசையில் இடம் பெறுகின்றன. மேலிருந்து கீழாகச் செல்லும் தொடரைத் தெளிவு கருதி நெரிசை என்போம். ஆய்தத்தின் கீழுள்ள நெரிசையில் 18 மெய்யெழுத்துகள் அமைகின்றன. பிற உயிர்களின் கீழ் நெரிசைகளில் அந்தந்த உயிர்மெய்யெழுத்துகள் அமைகின்றன.

உயிர் - 12, மெய் - 18, உயிர்மெய் - 216, ஆய்தம - 1
ஆகமொத்தம் 247

தமிழ் எழுத்துகள் 247 என்பதில் எந்த மாறுதலையும் இவ்வெழுத்துரை கோரவில்லை.

3. உயிர்வரிசை அமைப்பு

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

சில ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் முதல் வகுப்புப் பாடப்புத்தகத்தில் இவ்விரண்டு எழுத்துகளையும் பட வடிவில் எழுதிக் காட்டியிருந்தன.

அ ஆ | இ ஈ

உ ஊ | எ ஏ

ஐ

ஒ ஓ

ஔ

இந்தப் படத்திலிருந்து கிளம்பும் கேள்வியாவது ஐகாரம், ஔகாரத்தை ஒன்றாக்கி ஒரு கட்டத்தில் வைத்தால் என்ன என்பது தான். வைப்பதில் பிழை ஏதும் இல்லை.

| | |
|---|---|
| அ ஆ | இ ஈ |
| உ ஊ | எ ஏ |
| ஒ ஓ | ஐ ஔ |

தமிழ் இலக்கணப்படி அ+ இ=ஐ ; அ+உ= ஔ. அவ்வாறாயின் ஈகாரத்திற்குப் பின் ஐகாரமும்,ஊகாரத்திற்குப் பின் ஔகாரமும் அமைந்திருக்க வேண்டும். அவ்வாறில்லை. ஏகாரத்திற்குப் பின் ஐகாரமும் ஓகாரத்திற்குப் பின் ஔகாரமும் அமைந்துள்ளன. இதற்கான விளக்கம் வடமொழியில் உள்ளது.

அ+இ=ஏ; அ+ஏ= ஐ

அ+உ= ஓ; அ+ஓ= ஔ

எனவே தற்போதைய உயிர்வரிசை, வடமொழிச் சார்பானது. எப்படியிருந்தாலும் ஐ,ஔ எழுத்துக்களை வைத்துக் கொள்வோம். 11,12 ஆவது இடங்களில்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஒ | ஓ | ஐ | ஔ |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

உயிர்மெய்யெழுத்துகளை ஒரே வரிசையில் வைப்பதற்குப் பதிலாக இரண்டு வரிசையில் வைக்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | இ | உ | எ | ஒ | ஐ |
| ஆ | ஈ | ஊ | ஏ | ஓ | ஔ |

4. மெய் நெரிசை அமைப்பு

18 மெய் எழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம், என மூன்று வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றின் எழுத்தணி நெரிசை வருமாறு;

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ங | ச | ஞ | ட | ண | த | ந | ப | ம | ய | ர | ல | வ | ழ | ள | ற | ன |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |

முந்தைய முதல் வகுப்புப் பாடப்புத்தகத்தில் இவற்றைப் படமாக அடுக்கிக் காட்டியிருகிறார்கள்.

க ங | ச ஞ

ட ண | த ந

ப ம

ய ர ல வ ழ ள

ற ன

தம்மின் மிக்கார் தம்மக்கள் என அய்யன் திருவள்ளுவர் கூறிவிட்டதால் பெற்றோர் கேட்க மறந்த கேள்வியை பிள்ளைகள் கேட்டனர். விடை கூறத்தான் ஆளில்லை. றன எழுத்துகளை இடையினத்திற்கு முன்னாலல்லவா அமையவேண்டும்

க ங | ச ஞ

ட ண | த ந

ப ம | ற ன

ய ர ல வ ழ ள

ற ன தமது 17,18 இடங்களிலிருந்து 11,12 இடங்களுக்கு முன்னேற வேண்டும்.

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ங | ச | ஞ | ட | ண | த | ந | ப | ம | ற | ன | ய | ர | ல | வ | ழ | ள |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |

வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற இலக்கணமும் பொருந்தி வருகிறது.

முறை மாறி அமைந்தமைக்கான காரணம், வடமொழியே. ழ ள ற ன ஆகிய நான்கு எழுத்துகளும் வடமொழியில் இல்லை. எனவே இந்நான்கையும் மெய் நெரிசையின் இறுதியில் வைத்தனர். இடைக்காலத்தில் ஓதல்,ஓதுவித்தல் என்ற வழக்கத்தின் படி வடமொழிவாணர் கைக்குச் சென்ற கல்வி தற்போது அவர்களின் பிடியிலிருந்து விலகி வந்து கொண்டிருக்கிறது. ஆனால் தமிழ் இன்னும் விடுதலை பெற முடியவில்லை.

5. முதலெழுத்துகள்

உயிரும் மெய்மோய் முதலெழுத்துகள் 30 ஆகும். அவற்றை முறைப்படி அடுக்கிப் பார்க்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ<br>ஆ | இ<br>ஈ | உ<br>ஊ | எ<br>ஏ | ஒ<br>ஓ | ஐ<br>ஔ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க<br>ங | ச<br>ஞ | ட<br>ண | த<br>ந | ப<br>ம | ற<br>ன |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ய | ர | ல | வ | ழ | ள |

6. தமிழ்நாட்டு கிரந்த எழுத்துகள்

பல்லவர்கள் காலத்து அரசவையில் வட மொழியாளர் முதன்மைப் பங்கு பெற்றிருந்தனர். அரசனின் புகழ்பாடும் மெய்க்கீர்த்திகள் வடமொழியில் எழுதப்பட்டன. அதன் பின்னர் வந்த அரசாணைகள் தமிழில் எழுதப்பட்டன அக்காலத் தமிழர்கள், தம் தமிழ் எழுத்துகளிலேயே சிறிதளவு மாற்றம் செய்து வடமொழியை எழுதினர். வடநாட்டு நாகரி எழுத்தை அனுமதிக்கவில்லை.

கிரந்தம் தமிழர்களால் உருவாக்கப்பட்டது. எனினும் வடமொழிக்காகத் தானே. அதிலிருந்து ஆறு எழுத்துகள் படிப்படியாக தமிழில் ஊடுருவிக் கொண்டன. விலக்க இயலாத அளவுக்கு ஒன்றிப் போய்விட்டன. தமிழியக்கம் தற்போது தலையெடுத்து அவற்றை விலக்கி வைக்கவே விரும்புகிறது. எனினும் அவற்றை விலக்க முடியவில்லை. முதல் வகுப்புத் தமிழ்ப்பாடநூலில் கற்பிக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசாங்க நாட்காட்டியில் ஜூன் ஜூலை இன்னும் இடம் பெறுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ரீ | ஜ | ஷ | ஸ | ஹ | க்ஷ |

7. மெய் எழுத்துகள்

18. மெய்யெழுத்துகளும் தலையில் புள்ளி வைத்தால் போதும். தட்டச்சு, கணிப்பொறிகளில் புள்ளியாக அமைக்கும் வசதி உள்ளது.

8. உயிர்மெய் எழுத்துகள்

கெ கே கொ கோ கை கௌ டீ பூ மூ யூ ரூ ஆகிய ஐந்து துணைக் குறிகள் மூலம் ஏழு நெரிசைகள் சீராகவுள்ளன. கி கீ நெரிசைகளில் மேல்விலங்கு எழுத்துடன் ஒட்டியுள்ளன. தட்டச்சு, கணிப்பொறிகளில் இவற்றைப் பிரித்து அமைக்கும் வசதியுள்ளது.

உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகள் மட்டுமே பிரிக்க இயலாத இணைப்புகள் கொண்டுள்ளன. அவை வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கு | சு | டு | து | பு | று |
| கூ | சூ | டூ | தூ | பூ | றூ |
| ஙு | ஞு | ணு | நு | மு | னு |
| ஙூ | ஞூ | ணூ | நூ | மூ | னூ |
| யு | ரு | லு | வு | ழு | ளு |
| யூ | ரூ | லூ | வூ | ழூ | ளூ |

இந்த 36 எழுத்துகளும் தற்போது இயலாதவையாக உள்ளன. 1935 ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்கள் கும்பகோணம் கலைக் கல்லூரியில் உரையாற்றும் போது எழுத்துடன் என்ற கிரந்தக் குறிகளைப் பயன்படுத்தி எழுதலாம் என்று ஆலோசனை கூறினார். தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் பலர் இதனை ஆதரித்து எழுதிய போதிலும் அவ்வப்போது தோன்றும் சிறு சிறு தடைகளால் அது தடைப்பட்டுப் போகிறது. இந்த மாநாட்டில் இந்த ஆலோசனையைக் கருதிப் பார்த்து முடிவு எடுக்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | இ | உ | எ | ஒ | ஐ |
| ஆ | ஈ | ஊ | ஏ | ஓ | ஔ |

உயிர் 12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | ச | ட | த | ப | ற |
| ங | ஞ | ண | ந | ம | ன |

மெய் 18

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ய | ர | ல | வ | ழ | ள |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ரீ | ஜ | ஷ | ஸ | ஹ | க்ஷ |

கிரந்தம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ் | ி | ு | ெ | ை | டி |
| ா | ீ | ூ | ே | ஃ | டீ |

மெய்ப்புள்ளி 1, டி, டீ 2
துணைக்குறி 8, ஆய்தம் 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கு | சு | டு | து | பு | று |
| கூ | சூ | டூ | தூ | பூ | றூ |
| ஙு | ஞு | ணு | நு | மு | னு |
| ஙூ | ஞூ | ணூ | நூ | மூ | னூ |
| யு | ரு | லு | வு | ழு | ளு |
| யூ | ரூ | லூ | வூ | ழூ | ளூ |

உயிர்மெய் உகர, ஊகார எழுத்துகள்

முடிவுரை:

247 எழுத்துகள் கொண்ட தற்போதைய தமிழ் நெடுங்கணக்கு எழுத்தணியைவிட, மேலே உள்ள 84 வடிவங்கள் கொண்ட எழுத்தணி சிறியதாகவும் எளிமையாகவும் இருக்கும் . இளஞ்சிறாரின் மருட்சி குறையும்.

ஜ◌ரம், ஜ◌லை என எழுதுவது போன்று சடிரம் சநூலை என எழுதுவதற்குத் தமிழுலகம் அணியமானால் உகர, ஊகார உயிர்மெய் வடிவங்கள் 36குறைந்துவிடும் . தமிழ் எழுத்துகள் 40 மட்டும் நிற்கும் . கிரந்தம் தேவையானால் இன்றும் 6 வடிவம் கூடி 46 வடிவங்கள் மட்டுமே இருக்கும் .